# I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
## DEPOSITIONS OF WITNESSES
## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
## DEPOSITIONS OF WITNESSES P.W.7 (L.W.16)
## SC.NO.75/2018

| | | |
|---|---|---|
| Name | : | Thiru. Kasinathan |
| Father Name | : | Venkatesan |
| Occupation | : | Rtd, S.I. of Police, Katpadi |
| Taluk | : | |
| Age | : | 61 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 13.11.2025

அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி ஆஜர்.

**விசாரணை தொடங்கிய நேரம்: 12.10 p.m**

**1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

இந்த சம்பவம் 21.01.2006 ல் நடந்தது. எங்களை ரெய்டுக்கு யார் அழைத்தார்கள் என்றால் வேலூர் காவல் துணை கண்காணிப்பாளர் திரு. சரவணன் என்பவர் அழைத்தார். எனக்கு எழுத்து மூலமாக எந்த உத்தரவும் வரவில்லை. காவல் துணை கண்காணிப்பாளர் திரு. சரவணன், RSI சீனிவாசன், உதவி ஆய்வாளர் திரு. புகழ், உதவி ஆய்வாளர் திரு. அருள்தாஸ் மற்றும் AR police 10 பேர்கள் சென்றோம். நாங்கள் அனைவரும் காவல் வாகனம் TN 23 G 394 போலீஸ் பஸ் என்ற வாகனத்தில் சென்றோம். எந்த கம்பனி வாகனம் என்று தெரியாது. மாலை 06.45 மணிக்கு விரிஞ்சிபுரம் காவல் நிலையத்திலிருந்து புறப்பட்டு சிவநாதபுரம் கையிலாய மலை திப்பைக்கு சென்றோம். நாங்கள் அனைவரும் ஒன்றாக தான் சென்றோம்.

அங்கு சுமார் மாலை 06.00 மணிக்கு நேராக கையிலாய மலை திப்பைக்கு சென்றோம். அந்த கையிலாய மலை திப்பையில் நேரடியாக வாகனம் செல்ல வழி உள்ளதா என்றால் இல்லை. கீழே விட்டு விட்டு நடந்து சென்றோம். சிவநாதபுர மலை அடிவாரத்தில் வாகனத்தை நிறுத்திவிட்டு நாங்கள் அனைவரும் நடந்து சென்றோம்.

நாங்கள் போகும் போது அனைவரும் சீருடையில் இருந்தோமா என்றால் இல்லை, சிலர் மட்டும் சீருடையில் இருந்தார்கள். வாகனத்தை நிறுத்திவிட்டு கையிலாய மலை திப்பைக்கு போக எவ்வளவு தூரம் என்றால் சுமார் 1/2 கிமீ இருக்கும். நாங்கள் வாகனத்தை நிறுத்தி அங்கிருந்து பார்த்தபோது திப்பை என்ற இடத்தில் ஆள் நடமாட்டம் இருந்தது. சுமார் 5,6 பேர் இருந்தார்கள்.

நாங்கள் போலீஸ் வாகனத்தில் போவதை பார்த்துவிட்டு அங்கிருந்தவர்கள் பயந்து ஓடிவிட்டார்களா என்றால் 3 மட்டும் ஓடினார்கள். நான் அவர்களை ஓடியதை எவ்வளவு தூரத்தில் பார்த்தேன் என்றால் ஒரு பர்லாங் தொலைவில் பார்த்தேன். அந்த ஓடிய 3 பேர்கள் கையில் எதாவது வைத்திருந்தார்களா என்றால் எதுவும் இல்லை.

அங்கிருந்ததாக சொல்லப்படும் நபர்கள் என்ன ஆடை அணிந்திருந்தார்கள் என்றால் லுங்கி கட்டியிருந்தார்கள். பச்சை கலர் போன்ற லுங்கி, சிவப்பு டீ சர்ட் அணிந்திருந்தார்கள். யார் யார் என்ன ஆடை அணிந்திருந்தார்கள் என்று தெரியாது. அதை மட்டும் தான் நாங்கள் பார்த்தோம் வேறு எதையும் பார்க்கவில்லை.

அதன் பிறகு அங்கிருந்து கிளம்பிவிட்டோம் என்றால் நாட்டு துப்பாக்கியால் போலீசை பார்த்து " எங்க பொழப்ப கெடுக்க வந்தீட்டீங்க" என்று சொல்லிகொண்டு சுட்டார்.நாங்கள் போகும்போது தூப்பாக்கி எடுத்து சென்றோமா என்றால் சம்மந்தப்பட்ட அலுவலர் ரிவால்வர் எடுத்து வந்தார். 2 துப்பாக்கி எடுத்து சென்றோம்.

கைப்பற்றியதாக சொல்லப்படும் நாட்டு துப்பாக்கிகள் ஒரே மாதிரிதான், ஒன்று சிறியது மற்றும் ஒன்று பெரியது. சிறிதும், பெரிதும் தவிர்த்து வேறு எந்த அடையாளமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நாட்டு துப்பாக்கி என்பதால் அதற்கு லைசன்ஸ் இல்லை என்றால் சரிதான். உரிமம் இல்லாததால் அந்த துப்பாக்கி யாருடையது என்று குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான்.

அந்த துப்பாக்கிகளை என் உடன் வந்தவர்கள் எடுத்து வந்தார்கள். 2 லாரி

டியுபுகளில் 100 லிட்டர் சாராயம் எடுத்து வந்தோம். அந்த சாராயத்தை என் உடன் வந்த காவலர்கள் தான் எடுத்து வந்து காவல் வாகனத்தில் வைத்தார்கள் என்றால் சரிதான்.

அதன் பிறகு நாங்கள் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் காயம் பட்டவர்களை சிகிச்சைக்காக சேர்த்தோம். நாங்கள் மேல் அதிகாரி கேட்டு கொண்டதன் பேரில் சாராய வேட்டைக்கு போனோம் என்றாலும் அப்போது வேட்டையாடி கொண்டிருந்த மலை வாழ் மக்களை பார்த்து காவல் துணை கண்காணிப்பாளர் சுட்டுவிட்டார் என்றாலும் அதனால் மணி என்பவருக்கு காலில் குண்டு பாய்ந்து காயம் ஏற்பட்டது என்றாலும் அந்த வழக்கிலிருந்து தப்பிக்க எதிரிகள் சாராயம் விற்கு கொண்டிருந்ததாகவும் அவர்கள் துப்பாக்கியால் சுட்டதாகவும், அசிங்கமாக பேசியதாகவும், எங்கள் உயர் அதிகார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இந்த வழக்கிலுள்ள சாராயம், நாட்டு துப்பாக்கி அனைத்தும் எங்கள் உயர் அதிகாரியால் வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. மருத்துவமனையில் சேர்ந்த பிறகு இந்த வழக்கு சம்மந்தமாக யாரும் வேறு எந்த விசாரணையும் செய்யவில்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**விசாரணை முடிந்த நேரம்: 12.25 p.m**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI

Digitally signed by G SANTHI
Date: 2025.11.13 17:35:30 -0100

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்